செ.வெ.எண்:24 நாள்:12.06.2019

**கரூர் மாவட்டம்**

**குழந்தைகளை தொழிலாளர்களாக பயன்படுத்துபவர்களுக்கு சட்டப்படி கடும் தண்டனை விதிக்கப்படும் - விழிப்புணர்வு பேரணி உறுதிமொழி ஏற்பு மற்றும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்.**

தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறை சார்பில் நடைபெற்ற குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினரை பணியில் ஈடுபடுத்துவதை தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் கீழ் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு பேரணி, உறுதிமொழிஏற்பு நிகழ்ச்சி, கையெழுத்து இயக்கம், வாகனங்களில் ஒட்டுவில்லைகளை ஒட்டுதல் ஆகிய நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.06.2019) கரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

எதிர்கால இந்தியாவை உருவாக்கும் சக்திபடைத்தவர்கள் இன்றைய குழந்தைகள் மற்றும் மாணவச்செல்வங்களே. குழந்தைகளின் நலன் கருதி தமிழக அரசு அவர்களுக்கு தரமான கல்வியை வழங்கிடவேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. விலையில்லா நோட்டு புத்தகங்கள், வண்ணச்சீருடைகள், மடிக்கணினி, மிதிவண்டி, காலணிகள் என பலவகையான பொருட்களை தமிழக அரசு வழங்கி வருகின்றது.

இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்திவரும் தமிழ்நாட்டில், குழந்தைகளை தொழிலாளர்களாக நடத்துவது என்பது மிகவும் வருத்தத்திற்குரிய செயலாகும், சட்டப்படி தண்டனைக்குரிய செயலாகும்.

குழந்தைகளை தொழிலாளர்களாக பணியில் ஈடுபடுத்துவது, துன்புறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுத்தாமல் தடுக்கவும், இது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்திடவும், ஒவ்வொரு ஆண்டும் ஜீன் திங்கள் 12-ம் நாள் குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு உறுதிமொழி ஏற்பு, துண்டுபிரசுரங்கள் வழங்குதல், கருத்தரங்குகள் என பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

குழந்தை தொழிலாளர் முறையை தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1986-ன்படி 14 வயதிற்குட்பட்ட எந்த குழந்தைகளையும் எவ்வித பணியிலும் ஈடுபடுத்துவதும், 15 முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகளை முதன்முறை மீறுவோருக்கு ரூ.50,000 அபராதம் அல்லது 2 ஆண்டு சிறை தண்டனையும், 2-ம் முறையாக மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட

குழந்தைகளின் பாதுகாவலர் அல்லது பெற்றோர்களுக்கும் ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும். வளர வேண்டிய பருவத்தில் குழந்தைகளுக்கு நல்ல வழிமுறைகளை சொல்லித்தந்து கட்டாயக்கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் 14 வயதிற்குட்பட்ட அனைவரையும் கல்வி கற்க செய்து குழந்தை தொழிலாளர் அற்ற மாவட்டமாக நமது கரூர் மாவட்டத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தா்.

கரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய இந்த விழிப்புணர்வு பேரணி, வடக்கு பிரதட்சணம் சாலை, ஜவஹர் பஜார் வழியாக சி.எஸ்.ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் முடிவடைந்தது. இப்பேரணியில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்று குழந்தை தொழிலாளர் எதிர்ப்புக்குரிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி கரூரின் முக்கிய வீதிகள் வழியாக விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர்.

இந்நிகழ்ச்சியில், கரூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, தொழிலாளர் நல உதவி ஆணையர் திருமதி.பொ.கிருஷ்ணவேணி, வட்டாட்சியர் திரு.சக்திவேல், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**